## பாடம் - 1

## திருவிவிலியம்

1. கிறிஸ்தவர்களின் அதி மேன்மையான நூல் எது?

   திருவிவிலியம்

2. திருவிவியத்தின் வேறு பெயர்கள் எவை?

   1. இறைவார்த்தை 2. பைபிள் 3. வேதகாமம்

   4. மறைநூல் 5. வேதநூல்

3. உலகிலேயே அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் எது?

   திருவிவிலியம்

4. திருவிவிலியம் ஏன் புனித நூல் என அழைக்கப்படுகின்றது?

   1. இறைவனை ஆசிரியராக கொண்டிருப்பதால்

   2. இறைவனின் வார்த்தைகளை கொண்டிருப்பதால்

   3. இதன் வழியாக நாம் இறைவனுடன் உறவாடுவதால்

   4. இதன் வழியாக இறைவன் தம்மை எமக்கு வெளிப்படுத்துவதால்

5. கிறிஸ்தவர்களின் ஆராதனைக்குரிய நூல் எது?

   திருவிவிலியம்

6. திருவிவிலியத்திற்கு நாம் ஏன் மரியாதை செலுத்த வேண்டும்?

   இறைவார்தையை கொண்டிருப்பதால்

7. திருவிவிலியத்திற்கு நாம் எவ்வாறு மரியாதை செலுத்த வேண்டும்?

   1. அதற்கென ஓரிடத்தை ஒழுங்கு செய்தல்

   2. மேசை ஒன்றினை வைத்தல்.

   3. வெள்ளைத் துணியை விரித்தல்

   4. அதன் மேல் இரு கைகளாலும் திருவிவிலியத்தை வைத்தல்.

   5. மாலை போட்டு, விளக்கேற்றி ஆராதனை செய்தல்.

8. "திருவிவிலியம் பல நூல்களைக் கொண்ட ஒரு நூலகும்" காரணம் தருக?

   1. இறைவன் தம்மை குலமுதுவர்கள், இறைவாக்கினர் வழியாக வெளிப்படுத்தியமை

   2. வெவ்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளமை

   3. கிறிஸ்துவால் முழு மனித குலம் அடைந்த மீட்பு பற்றி கூறப்பட்டுள்ளமை.

9. திருவிவிலியத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம்?

   2

   1. பழைய ஏற்பாடு

   2. புதிய ஏற்பாடு

10. பழைய ஏற்பாடு எதைப் பற்றி கூறுகின்றது?

    இறைவன் தம்மை வரலாற்று நிகழ்வுகளுடாகவும்,

    பிதாப்பிதாக்களுடாகவும்,இறைவாக்கனருடாகவும் வெளிப்படுத்தியதைக் கூறுகின்றது.

11. புதிய ஏற்பாடு எதைப்பற்றி கூறுகின்றது?

    இயேசுவைப் பற்றியும், அவரது போதனைகள் பற்றியும், ஆரம்ப கால திரச்சபை பற்றியும் கூறுகின்றது.

12. பழைய ஏற்பாடடில் உள்ள நூல்கள் எத்தனை?

13. புதிய ஏற்பாடடில் உள்ள நூல்கள் எத்தனை?

27

14. திருவிவிலியத்தில் உள்ள நூல்கள் எத்தனை?

73

15. திருவிவிலியத்தை எழுதி முடிக்க எடுத்த காலப்பகுதி எத்தனை?

1000 வருடம்

16. பழைய ஏற்பாடு நூல்களை தருக.

| | | |
|---|---|---|
| 1. தொடக்க நூல் | 17. தோபித்து | 33. பாரூக்கு |
| 2. விடுதலைப்பயணம் | 18. யூதித்து | 34. ஓசேயா |
| 3. லேவியர் | 19. எஸ்தர் | 35. யோவேல் |
| 4. எண்ணிக்கை | 20. 1மக்கபேயர் | 36. ஆமோஸ் |
| 5. இணைச்சட்டம் | 21. 2 மக்கபேயா | 37. ஒபதியா |
| 6. யோசுவா | 22. யோபு | 38. யோனா |
| 7. நீதித்தலைவர்கள் | 23. திருப்பாடல்கள் | 39. மீக்கா |
| 8. ரூத்து | 24. நீதி மொழிகள் | 40. நாகூம் |
| 9. 1 சாமுவேல் | 25. சபை உரையாளர் | 41. அபகூக்கு |
| 10. 2 சாமுவேல் | 26. இனிமை மிகு பாடல் | 42. ஆகாய் |
| 11. 1 அரசர்கள் | 27. சாலமோனின் பாடல் | 43. செக்கரியா |
| 12. 2 அரசர்களா | 28. சீராக்கின் ஞானம் | 44. மலாக்கி |
| 13. 1 குறிப்பேடு | 29. எசாயா | 45. தானியேல் |
| 14. 2 குறிப்பேடு | 30. எரேமியா | 46. செப்பனியா |
| 15. எஸ்ரா | 31. எசேக்கியல் | |
| 16. நெகேமியா | 32. புலம்பல் | |

17. பழைய ஏற்பாட்டு நூல்கள் 2 தருக.

1. தொடக்கநூல்
2. விடுதலைப்பயணம்

## பாடம் - 2

## ஐந்நூல்

**1.** ஐந்நூலுக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?

1. தோரா 2. பஞ்சாகமம் 3. திருச்சட்டம் 4. நீதிச்சட்டம் 5. மோசேயின் சட்டம்

**2.** ஐந்நூலை எபிரேய மொழியில் எவ்வாறு அழைப்பர்?

“தோரா”

**3.** “தோரா” என்பதன் பொருள் யாது?

திருச்சட்டம் அல்லது படிப்பினை

**4.** ஐந்நூலில் அடங்கும் நூல்கள் எவை?

1. தொடக்கநூல் 2. விடுதலைப்பயணம் 3. லேவியராகமம்
4. எண்ணிக்கையாகமம் 5. இணைச்சட்டம்

5. தொடக்க நூல் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

திருவிவிலியத்தின் முதல் நூல் இதுவாகும். இறைவன் தனது அன்பினால் மனிதனை படைத்ததையும், பாவத்தில் விழுந்த மனிதனை மீட்க "இஸ்ராயேல்" இனத்தை தெரிந்ததையும், குலமுதுவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதையும் பற்றி கூறுகின்றது.

6. தொடக்க நூலிலுள்ள விடயங்கள் எவை?

1. உலகப்படைப்பு, மனிதப்படைப்பு பற்றிக் கூறுவது.
2. ஆதாம், ஏவாள் பாவத்தில் விழுதல்.
3. காயின் ஆபேல் கதை.
4. நோவாவும் வெள்ளப் பெருக்கும்
5. பாபேல் கோபுரக்கதை
6. குலமுதுவர்கள், யோசேப்பு இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை.

7. திருவிவிலியத்தின் முதல் நூல் எது?

தொடக்க நூல்

8. விடுதலைப்பயண நூல் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

திருவிவிலியத்தின் இரண்டாவது நூல். இதில் இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமையாக இருந்து, மோயீசன் வழியாக மீட்கப்பட்டதையும், சீனாய் மலையில் "சீனாய" உடன்படிக்கை மூலம் பத்துக்கட்டளையை பெற்றுக் கொண்டதையும், இஸ்ரேயேல் மக்களை தனது மக்கள் என ஏற்றுக் கொண்டதையும் கூறுகின்றது.

9. விடுதலைப்பயண நூலிலுள்ள விடயங்கள்

1. இஸ்ரேயேல் மக்கள் எகிப்தில் அனுபவித்த துன்பங்கள்.
2. மோயீசன் வழியாக அவர்களை மீட்டது.
3. சீனாய் மலை உடன்படிக்கை வழியாக இறைவனின் மக்களானது
4. பத்துக்கட்டளையை பெற்றுக் கொண்டது.
5. இறைவனின் அன்பை கண்டுணர்ந்தது.

10. மோயீசன் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?

லேவி இனத்தை

11. மோயீசனின் பெற்றோர் மோயீசனை எந்த நதியில் விட்டனர்?

நைல் நதியில்

12. மோயீசனின் தொழில் யாது?

ஆட்டு மந்தை மேய்த்தல்

13. மோயீசனுக்கு இறைவன் என்ன வடிவில் காட்சி கொடுத்தார்?

எரியும் முட்செடி வடிவில்

14. இறைவன் மோயீசனுக்கு எங்கு காட்சி கொடுத்தார்?

ஒரேபு மலையில்

15. மோயீசனுக்கு இறைவன் கொடுத்த அழைப்பு யாது?

இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அழைத்துச் செல்லுதல்.

16. இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடு எது?

கானான்

## பாடம் - 3

### நற்செய்தி

1. இயேசுவைப் பற்றிக் கூறும் 4 மூலகங்களும் எவை?

   1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

2. நற்செய்தி நூல்கள் எத்தனை? அவை எவை?

   4

   1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

3. நான்கு நற்செய்திகளுக்குரிய அடையாளங்கள் எவை?

   1. மத்தேயு – மனித முகம் 2. மாற்கு – சிங்கம்

   3. லூக்கா – எருது 4. யோவான் - கழுகு

4. மத்தேயு நற்செய்திக்கு மனிதமுகம் ஏன் அடையாளமாக கொடுக்கப்பட்டது?
   இயேசுவின் மூதாதையர் பட்டியலோடு ஆரம்பித்ததால் மனிதமுகம் அடையாளமாக கொடுக்கப்பட்டது.

5. மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் யார்?
   புனித மத்தேயு

6. மத்தேயு பற்றி 5 கருத்துக்கள் தருக?
   1. மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் ஆவார்.
   2. இவர் சுங்கவரி அதிகதரியாக இருந்தார்.
   3. இவரது வேறு பெயர் லேவி.
   4. இவர் இயேசுவின் சீடராவார்.
   5. இவரது தந்தை பெயர் அல்பேயு

7. புனித மத்தேயு எழுதப்பட்டதன் நோக்கம் யாது?
   இயேசு யூதர்களால் எதிர்பார்க்கப்பட்ட மெசியா என்பதை எண்பித்த நோக்கமாகும்.

### புனித மாற்கு நற்செய்தி

8. புனித மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் யார்?
   புனித மாற்கு

9. புனித மாற்கு நற்செய்திக்குரிய அடையாளம் எது?
   சிங்கம்

10. புனித மாற்கு நற்செய்திக்கு ஏன் சிங்கமுகம் அடையாளமாக கொடுக்கப்பட்டது?
    திருமுழுக்கு யோவானின் போதனையுடன் ஆரம்பித்தால்

11. புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்திகளிலும் எது முதல் எழுதப்பட்ட நற்செய்தியாகவுள்ளது?
    மாற்கு நற்செய்தி

12. புனித மாற்கு பற்றி 5 வசனம் தருக?
    1. இவர் யூதர்கள் மத்தியில் யோவான் (மாற்கு) என்றும் அழைக்கப்பட்டார்.
    2. இவர் மாற்கு நற்செய்தியின் ஆசிரியராவார்.
    3. இவர் பேதுருவின் மொழி பெயர்ப்பாளராக இருந்தார்.

### புனித லூக்காஸ் நற்செய்தி

13. புனித லூக்காஸ் நற்செய்தியின் ஆசிரியர் யார்?
    புனித லூக்காஸ்

14. புனித லூக்காஸ் நற்செய்தியின் அடையாளம் எது?
எருது

15. புனித லூக்காஸ் நற்செய்திக்கு ஏன் எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது?
குரு செக்கரியாசின் பலியோடு ஆரம்பிப்பதால், எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது.

16. புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?
இயேசுக் கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் அனைவருக்கும் மீட்பர் என்பதை எடுத்து காட்டவே நற்செய்தியை எழுதினார்.

17. புனித லூக்காஸ் பற்றி 5 விடயங்கள் தருக?
1. இவர் புனித லூக்காஸ் நற்செய்தியின் ஆசிரியர்.
2. இவர் ஓர் வைத்தியர்.
3. புனித பவுலின் பயணத் தோழன்.
4. இவர் ஒரு புறவினத்தவர்.
5. இதில் பாடல்கள், செபங்கள், பெண்கள் பற்றிய தகவல்கள் அதிகம் காணப்படகின்றன.

## புனித யோவான் நற்செய்தி

18. புனித யோவான் நற்செய்தியின் ஆசிரியர் யார்?
புனித யோவான்

19. புனித யோவான் நற்செய்திக்கு வழங்கப்பட்ட அடையாளம் எது?
கழுகு

20. புனித யோவான் நற்செய்திக்கு ஏன் கழுகு அடையாளம் கொடுக்கப்பட்டது?
ஆழமான இறையியல் கருத்துக்களை காண்படுவதால் கழுகு அடையாளம் கொடுக்கப்பட்டது.

21. புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட நேதக்கம் யாது?
இயேசுவே இறைமகனாகிய மெசியா என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவே நற்செய்தியை எழுதினார்.

22. புனித யோவான் பற்றி அறிந்துள்ள 5 விடயங்கள் தருக?
1. புனித யோவான் நற்செய்தியின் ஆசிரியர்.
2. இவர் இயேசுவால் விசேடமாக அன்பு செய்த சீடர்களுள் ஒருவர்.
3. சிலுவை அடியில் தாய் மரியாளிடம் ஒப்படைக்கப்பட்டவர்.
4. இவர் செபதேயு, சலோமையின் புதல்வர்.
5. இவரது சகோதரன் பெரிய யாக்கோபு.

23. நற்செய்தியாளர்களில் திருத்தூதர்கள் இருவரின் பெயர்கள் தருக.
1. புனித மத்தேயு
2. புனித யோவான்

24. திருமுழுக்கினால் நற்செய்திப் பணிக்கு அழைக்கப்பட்ட நீர் வகுப்பில் எவ்விதம் நற்செய்தியை பரப்புவீர்?
1. எனது சக மாணவர்களோடு அன்பாக பழகுவதன் மூலம்
2. பாடத்தை விளங்கிக் கொள்ள கஸ்டப்படும் மாணவர்களுக்கு அதை தெளிவுபடுத்துவேன்.
3. பாடத்தை படிக்க தொடங்கும் முன் செபிப்பேன்.
4. அதிபர், ஆசியர்களின் சொற்படி நடந்து கொள்வதன் மூலம்.
5. துன்பத்தில் இருக்கும் சக மாணவனுக்கு ஆறுதல் கூறுவேன்.

## பாடம் - 4

## உலகப் படைப்பு

1. உலகத்தை படைத்தது யார்?
 இறைவன்
2. இறைவன் உலகத்தைஎத்தனை நாளில் படைத்தார்?
 6 நாளில்
3. இறைவன்உலகத்தை படைத்த பின் எத்தனையாம் நாளில் ஒய்ந்திருந்தார்?
 7 ம் நாளில் (ஞாயிற்றுக்கிழமை)
4. படைப்பைப் பற்றி கூறும் நூல் எது?
 தொடக்கநூல்
5. எமக்காக உலகத்தை படைத்த இறைவனுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
 நன்றி கூற வேண்டும்
6. இறைவனால் படைக்கப்பட்ட படைப்புக்களுக்கு பெயரிட்டது யார்?
 ஆதாம் ஏவாள்
7. மனிதன் யாருடைய சாயலாக படைக்கப்பட்டான்?
 இறைவனுடைய
8. படைப்பு வரலாற்றை ஒழுங்கு முறையில் தருக.

| நாள் | படைப்பு |
|---|---|
| 1ம் நாள் | ஒளி – பகல், இரவு |
| 2ம் நாள் | வானமும், பூமியும் |
| 3ம் நாள் | நிலமும் மரம் செடிகளும் |
| 4ம் நாள் | சூரியன், சந்திரன், விண்மீண் |
| 5ம் நாள் | பறவைகளும், மீன்களும் |
| 6ம் நாள் | விலங்குகளும், மனிதனும் |
| 7ம் நாள் | ஓய்வு நாள் |

9. இறைவனால் படைக்கப்பட்ட படைப்புக்களில் மனித படைப்பு ஏன் மேன்மையடைந்துள்ளது?
 மனிதன் இறை உருவையும், சாயலை கொண்டிருப்பதால்
10. இறைவன் படைப்பை எவ்வாறு படைத்தார்?
 வார்த்தையின் வல்லமையினால்
11. கடவுள் ஒளிக்கு இட்ட பெயர்?
 பகல்
12. கடவுள் இருளுக்கு இட்ட பெயர்?
 இரவு
13. கடவுள் வானத்திற்குக இட்ட பெயர்?
 விண்ணுலகம்

14. இறைவனின் படைப்புக்களில் முதலில் படைக்கப்பட்டது எது?
ஒளி
15. கடவுள் உலர்ந்த தரைக்கு இட்ட பெயர்?
நிலம்
16. கடவுள் ஒன்று திரண்ட நீருக்கு இட்ட பெயர்?
கடல்
17. இறைவன் மனிதனை படைத்து இன்பமாக வாழ வைத்த இடம் எது?
ஏதேன் தோட்டம்
18. இறைவன் மனிதனை எத்தனையாம் நாளில் படைத்தார்?
6ம் நாளில்
19. படைப்பைப் பற்றி கூறும்திருப்பாடல் அதிகாரம் எது?
திருப்பாடல் - 104
19. இறைவனின் உன்னதப் படைப்பாகிய நமது கடமைகள் எவை?
1. படைப்பிற்கு மதிப்பளித்தல்.
2. பாதுகாத்தல்
3. விருத்தி செய்தல்
4. இறைவனுக்கு நன்றி கூறதல்.
5. படைப்பை அன்பு செய்தல்.
20. உலகினைப் படைத்து, எமக்களித்த இறைவனுக்கு நன்றி கூறி செபம் எழுதக.
அன்புத் தந்தையே இறைவா, அழகான உலகை படைத்து, அதில் மரம் செடி கொடிகளையும் படைத்து எனக்கு தந்தீர். அதுமட்டுமா? விலங்கினங்களையும், பறவைகளையும் படைத்து, அவற்றை பயன்படுத்த அதிகாரமும் தந்தீர். நான் உயிர் வாழ அனைத்தையும் தந்து பாதுகாத்து வழி நடத்தி வரும் உமது தயவிற்காக என் இதய பூர்வமாக நன்றி கூறுகின்றேன்

## பாடம் - 4

## படைப்பின் பல்வேறு தன்மைகள்

1. படைப்புகளில் உயர்ந்த படைப்ப யாது?
மனிதன்
2. இறைவன் மனிதனுக்குக் ஆசி வழங்கி கூறியது?
பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள், வானத்தப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்.
3. மனிதப் படைப்பின் சிறப்பு யாது?
இறைசாயலாகப் படைக்கப்பட்டது.
4. இறைவனின் படைப்பைப் பாதுகாக்கா விட்டால் ஏற்படும் தீமைகள் எவை?
1. நோய் 2. வரட்சி 3. புயல் 4. மண்சரிவு 5. சுனாமி 6. வெள்ளம்
5. இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த கடமைகள் எவை?
**1.** பிள்ளைப்பேறு
**2.** மண்ணுலகில் பலுகிப் பொருகுதல்
**3.** படைப்பை பாதுகாத்து விருத்தி செய்தல்
**4.** நிலத்தில் பயிர் செய்தல்
**5.** விளைச்சலைப் பாவகைக்கு எடுத்தல்

6. சூழலைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பொறுப்பு உம்மிடம் கொடுக்கப்பட்டிருந்தால் அதன் மட்டில் உமது செயற்பாடு யாது?

1. இயற்கையை அன்பு செய்து மதித்தல்
2. நிலத்தின் வளத்தைப் பாதுகாத்தல்
3. வாழும் சூழலை அழகுபடுத்தல்.
4. சூழல் சமநிலையைப் பேணுதல்.
5. சூழல் மாசடைவதைத் தவிர்க்க உதவுதல்.

7. இறைவன் மனிதனுக்குக் கொடுத்த கட்டளையை மீறும் செயல்கள் எவை?

1. சூழலை அசுத்தப்படுத்தல்
2. காடுகளை அழித்தல்
3. பொலித்தீன் பாவனை
4. குப்பைகளை முறையாக அகற்றாமை
5. காற்றை அசுத்தப்படுத்தல்
6. நீரை மாசுபடுத்தல்

8. கடவுள் மனிதனுக்கு கூறிய 2 விடயங்கள் எவை?

1. பல்கிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்
2. உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள

9. இறை படைப்பின் வழியாக மனிதன் பெறும் நன்மைகள்?

1. பெற்றோர்
2. உணவு
3. காற்று
4. ஒளி
5. நீர்

10. எம்மால் பாதுகாக்க வேண்டிய படைப்புக்கள் எவை?

1. நிலம்
2. காடு
3. காற்று
4. விலங்குகள்
5. நீர்

11. உமது வீட்டை சுத்தமாக வைத்திருக்க நீர் செய்ய வேண்டியசெயல்கள் 5 தருக?

1. வீட்டைக் கூட்டி துப்பரவு செய்தல்
2. குப்பை கூழங்களை குப்பை கூடையில் போடுதல்
3. நீர் தேங்கி நிற்காமல் வழிந்தோடச் செய்தல்
4. கிருமி கொல்லி மருந்துகளைப் பாவித்தல்
5. நெருக்கமாக உள்ள மரங்களின் கிளைகளை வெட்டுதல்

12. உமது வீட்டை அழகாக வைத்திருக்க நீர் செய்ய வேண்டியசெயல்கள் 5 தருக?

1. வீட்டைக் கூட்டி துப்பரவு செய்தல்
2. குப்பை கூழங்களை குப்பை கூடையில் போடுதல்
3. நீர் தேங்கி நிற்காமல் வழிந்தோடச் செய்தல்
4. அழகு தரும் மரங்களை வளர்த்தல்
5. வர்ணம் பூசுதல்

13. கடவுளின் படைப்பை விருத்தி செய்யக் கூடிய வழிகள் 5 தருக?

1. மரங்கள் வளர்த்தல்
2. மழை நீரை சேமித்தல்
3. காற்று மாசு படாமல் பாதுகாத்தல்
4. விலங்கினங்களை கொல்லக் கூடாது
5. நிலங்களை பண்படுத்தல்

14. கடவுளின் படைப்பை பாதுகாக்கக் கூடிய வழிகள் 5 தருக?

1. மரங்கள் வெட்டக் கூடாது
2. நீரை வீண்ணாக்கக் கூடாது
3. காற்று மாசு படாச் செய்யக் கூடாது
4. விலங்கினங்களை கொல்லக் கூடாது
5. நிலங்களை கவனியாது விடக் கூடாது

15. கடவுளின் படைப்பக்கு நன்றி கூறிச் செபம் எழுதுக?

அன்புத் தந்தையே இறவைா நீர் எனக்குத் தந்த பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். அவர்கள் மூலமாக நான் அடையும் எல்லா நன்றி கூறுகின்றேன். மரங்கள், நீர், நிலம், காற்று வழியாக எனது உயிரை காப்பாற்றி வருவதற்காகவும்நன்றி கூறுகின்றேன். விலங்குகள் வழியாக பால், உணவு தந்து வருவதற்காகவும் நன்றி கூறுகின்றேன். ஆமென்.

## பாடம் - 4

## இறைவனின்உன்னதப் படைப்பு

16. ரோபோ யாரால் படைக்கப்பட்டது?

பொறியியலாளர்களால்

17. ரோபோவின் செயற்பாடுகள் எவை?

1. வைத்தியத்திற்கு பயன்படுத்தல்
2. உயிரியல்,விஞ்ஞான செயற்பாடுகளுக்கு
3. குண்டுகளை செயலிழக்கச் செய்வதற்கு
4. சந்திரனுக்குச் செல்வதற்கு
5. மனிதர்கள் செல்ல இயலாத இடங்களுக்குச் செல்ல

18. ரோபோவிடம் இல்லாதவை எவை?

1. இதயம் இல்லை
2. உள்ளம் இல்லை
3. அறிவு இல்லை

19. ரோபோ யாரால் இயங்குகிறது?

தகவல்களினால்

20. மனிதன் யாரால் படைக்கப்பட்டான்?

இறைவனால்

21. மனிதனின் மேன்மைக்கு காரணம் யாது?

1. இறைவனின் சாயலாக படைக்கபபட்டது
2. இறைவனின் உயிர் மூச்சைக் கொண்டுள்ளது.
3. அறிவைக் கொண்டிருப்பதால்
4. படைப்பின் மட்டில் அதிகாரம் உடையவன்
5. மனிதப் படைப்பு நல்லது என்பதால்

22. மனிதனுக்கும் ரோபோக்கும் இடையிலான வேறுபாடு யாது?

| இல | மனிதன் | ரோபோ |
|---|---|---|
| 1 | இறைவனால் படைக்கப்பட்டவன் | மனிதனால் படைக்கப்பட்டது |
| 2 | இதயம் உண்டு | இதயம் இல்லை |
| 3 | உள்ளம் உண்டு | உள்ளம் இல்லை |
| 4 | அறிவு உண்டு | அறிவு இல்லை |
| 5 | தனாக செயற்படுவர் | தகவலுக்கு ஏற்ப செயற்படும் |
| 6 | உணர்வு உண்டு | உணர்வு இல்லை |

23. இறைவன் மனிதனுக்கு கொடுத்த பொறுப்புக்கள் எவை?
1. படைப்பை பாதுகாக்க
2. படைப்பை வளர்ச்சியடையச் செய்ய
3. படைப்பை ஆண்டு நடத்த

24. மனிதன் ஏனைய படைப்புக்களிலிருந்து வேறுபடுவதற்கு காரணம் யாது?
1. இறைவனின் சாயலாக படைக்கபபட்டது
2. இறைவனின் உயிர் மூச்சைக் கொண்டுள்ளது.
3. அறிவைக் கொண்டிருப்பதால்
4. படைப்பின் மட்டில் அதிகாரம் உடையவன் என்பதால்

25. இறைவன் எவ்வாறு மனிதனைப் படைத்தார்?
மண்ணால் மனித உருவம் செய்து அதனுள் உயிர் மூச்சை ஊதி மனிதனைப் படைத்தார்

26. படைப்புகளுக்க பெயரிட்டது யரர்?
மனிதன் (ஆதாம் )

27. இறைவனின் படைப்புத் தொழில் எப்போது நிறைவு பெற்றது?
மனிதனைப் படைத்த பின

28. மனிதன் மற்றவரில் இருந்து வேறுபடுவதற்கு காரணங்கள் எவை?
1. அவனது திறமை
2. அவனது விருப்பம்
3. அவனது வெறுப்பு
4. அவனது உடல் அமைப்பு
5. அவனது நிறம்
6. இனத்தால்
7. மொழியால்

29. பின்வரும் பாடலை வாசித்து அதன் மூலம் நீர் பெற்றுக் கொள்ளும் செய்திகள 5 தருக?

ஓவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஓவ்வொரு மனிதனும் சகோதரன்
ஓவ்வொரு மனிதனும் சகோதரன் என் சகோதரன்

வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல்படுபவன் என் நண்பன்
அபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் - 2

பிறகுலம் சேர்ந்தாலும் என் நண்பன்

பிற இனம் வாழ்ந்தாலும் சகோதரன்
பிறமொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சாந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் - 2

அழகை இழந்தவன் என் நண்பன்
அறிவை இழந்தவன் சகோதரன்
ஊனமாய் பிறந்தவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் - 2

**இப்பாடலில் பெறும் செய்திகள்**

1. எல்லோரையும் அன்பு செய்யவேண்டும்
2. வறுமையில், வருத்தத்தில், துன்பத்தில் ஆபத்தில் உதவ வேண்டும்
3. பிற குலம், இனம். மொழி, மதம் என்ற வேறுபாடில்லாமல் ஒற்றமையாக வாழ வேண்டும்.

**30.** மற்றவருக்கு மதிப்பளித்து, ஒன்றபட்டு ஓற்றுமையுடன் வாழ்வதற்கு செய்ய வேண்டியது யாது?

1. கீழ்படிதல்
2. விட்டுக் கொடுத்தல்
3. அன்பு செய்தல்
4. ஒழுங்குகளை பின்பற்றுதல்
5. உதவி செய்தல்

## பாடம் - 7
## இயேசுவின் பிறப்பு

**1.** மூவொரு கடவுள் யார்?
பிதா, சுதன். பரிசுத்தஆவி

**2.** மூவொரு கடவுளில் பிதா என்பர் யார்?
இறைவன்

**3.** மூவொரு கடவுளில சுதன் என்பர் யார்?
இயேசு

**4.** இயேசுவின் பெற்றோர் யாவர்?
தந்தை – யோசேப்பு
தாய் - மரியாள்

**5.** அன்னை மரியாளுக்கு மங்கள வார்த்தை சொன்னது யார்?
கபிரியேல் என்னும் வானதூதர்

**6.** கபிரியேல் என்னும் வானதூதர் கூறிய வார்த்தை யாது?
அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்

**7.** வானதூதர் கூறிய வார்த்தையை கேட்டு அன்னை மரியாள் கூறிய பதில் யாது?
நான் ஆண்டவரின் அடிமை,உம் செற்படியே எனக்கு நிகழட்டும்

**8.** இயேசு என பெயரிடுமாறு கூறிய இறைவாக்கினர் யார்?
எசாயா

**9.** இயேசு பிறந்த காலத்தில் இருந்த உரோமைய அரசன் யார்?
அகுஸ்து சீசர்

**10.** இயேசுவின் கோத்திரம் எது?
தாவிது

11. இயேசுவின் பிறப்பு முதலில் யாருக்கு அறிவக்கப்பட்டது?
இடையர்களுக்கு

12. வானதுாதர் இடையர்களுக்கு கூறியது என்ன?
இன்று ஆண்டவாரகிய மெசியா உங்களுக்காக தாவீன் கோத்திரத்தில் பிறந்துள்ளார்

13. இயேசு பிறந்ததை தெரியப்படுத்த வானத்தில் தோன்றிய அடையாளம் எது?
விண்மீன்

14. இயேசு பிறந்த காலத்தில் யூதாவை ஆண்ட சிற்றரசன் அரசன் யார்?
எரோது

15. இயேசுவின் பிறப்பு வேறு யாருக்கு அறிவிக்கப்பட்டது?
ஞானிகளுக்கு

16. இயேசுவைக் காண ஞானிகள் எடுத்து சென்ற பொருட்கள் எவை?
1. பொன்
2. சாம்பிராணி
3. வேள்ளைப் போளம்

17. இயேசுவை கொல்லத் தேடிய அரசன் யார்?
ஏரோது அரசன்

18. இயேசுவுக்கு விருத்தசேதனம் எத்தனையாம் நாள் கொடுக்கப்பட்டது?
8ம் நாள்

19. இயேசுவை கோயிலில் காணிக்கை கொடுத்த போது அவரோடு பலியாக கொடுத்த பொருட்கள் எவை?
ஒரு சேடி மாடப்புறா அல்லது இரு புறாக் குஞ்சுகள்

20. யூத இனத்தின் மறை,இனச்சம்பிரதாய சடங்குகள் எவை?
1. எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்தல்
2. பெயரிடுதல்
3. துாய்மையாக்கும் சடங்கை நிறைவேற்றல்
4. தலைப்போறான குழந்தையை ஆண்டவருக்கு அர்பணித்தல்

21. திருக்குடும்ப அங்கத்தவர்கள் யாவர்?
1. யோசேப்பு
2. மரியாள்
3. யேசு

22. திருக்குடும்பத்தினர் யூதமத, இன சம்பிரதாயச் சடங்குகளை பின்பற்றினர் என்பதை எடுத்துக்காட்டும் செயல்கள் எவை?
1. யேசுவுக்கு விருத்தசேதனம் கொடுத்தது
2. யேசுவை காணிக்கை கொடுத்தது
3. “யேசு” என்ற பெயரை வைத்தது

23. திருக்குடும்பத்தினரின் முன்மாதிரிகையான வாழ்கையை பின்பற்றி நாமும் செய்யக் கூடியவை எவை?
1. மத சமபிரதாயங்களை மதித்து நடத்தல்
2. சமூக சட்டங்களை கடை பிடித்தல்
3. பிறருக்கு உதவுதல்
4. யேசுவைப் போல் பெற்றோர்ருக்கு கீழ்ப்படிதல்
5. யேசுவைப் போல் பெற்றோர்ருக்கு உதவுதல்

24. இயேசுவின் பிறப்பை பற்றி இறைவாக்குரைத்த இறைவாக்கினர் யார்?
எசாயா

25. இயேசுவின் பிறந்த தினம் எப்பொது கொண்டாடப்படுகின்றது?
மார்கழி 25ம் திகதி

26. மரியாளின் உறவு முறையானவர்?
எலிசபேத்

27. செக்கரியா, எலிசபேததின் மகன் யார்?
திருமுழுக்கு யோவான்

28. திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு எத்தனை மாதத்தால்மூத்தவர்?
6 மாதத்தால்

29. நத்தார் தினத்தில் கிஸ்தவ வீடுகளில் அமைக்கப்படுவது எது?
பாலன் கொட்டில்

30. நத்தார் தினத்தில் நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் 5 தருக?
1. வயது முதிர்ந்தவர்களுக்கு உதவுதல்
2. பெற்றோருடன் வைத்தியசாலையில் உள்ள யாருமில்லாத நோயாளிகளை பார்வையிடல்
3. நண்பர்களுடன் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபடல.
4. ஏழைகளுக்கு உதவுதல்.
5. ஆலயப்பணிகளில் உதவுதல்.

31. இயேசுவின் புகழ்ச்சிப் பாடலைப் பாடியவர்கள் யார்?
வானதூதர்கள்

32. இறைவார்த்தைகளை மனனம் செய்க.
1. அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்.
2. இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.
3. நான் ஆண்டவரின் அடிமை, உம் செற்படியே எனக்கு நிகழட்டும்.
4. அஞ்சபாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்.
5. ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்பணிக்கட்டும்.

## பாடம் - 8
## இயெசுவின் பிள்ளைப்பருவம்

1. யூத வழக்கப்படி இயேசுவும், பெற்றோரும் பாஸ்கா விழாவற்குளங்கு சென்றார்கள்?
எருசலேமிற்கு

2. ஏன் இயேசுவும், பெற்றோரும் எருசலேமிற்கு சென்றார்கள்?
பாஸ்கா விழாவிற்கு

3. இயேசுவோடும், பெற்றோரோடும் வேறு யார் பாஸ்கா விழாவற்கு எங்கு சென்றார்கள்?
1. உறவினர்கள்
2. நண்பர்கள்

4. இயேசு எத்தனை வயதில் காணாமல் போனார்?
12 வயதில்

5. எத்தனை நாளுக்குப் பின் மரியாளும் யோசேப்பும் இயேசுவை கண்டார்கள்?
3 நாளுக்குப் பின்

6. சிறுவன் இயேசு எருசலேமில் தங்குதற்கு காரணம் யாது?
கோவலில் போதகர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடம் கேள்வி எழுப்பி கொண்டும் அவர்களிடம் கேள்விகளை கேட்டுக் கொண்டும் இருந்ததால்

7. சிறுவன் இயேசு எருசலேம் அலயத்தில் என்ன செய்து கொண்டு இருந்தார்?
கோவலில் போதகர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடம் கேள்வி எழுப்பி கொண்டும் அவர்களிடம் கேள்விகளை கேட்டுக் கொண்டும் இருந்ததார்.

8. மரியாள் இயேசுவிடம் "ஏன் இப்படி செய்தாய்? இதோ பார் நானும் உன் தந்தையும் மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோம்" என கேட்டதற்கு இயேசு அளித்த பதில் யாது?

நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

9. இயேசு இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கம் என்ன?
மக்களை பாவத்தில் இருந்து மீட்ப்பதற்கு

10. இயேசுவின் பிள்ளைப்பருவ வளர்ச்சி பற்றி புனித லூக்காஸ் என்ன கூறினார்?
இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார்.

11. இயேசு வளர்ச்சி பெற்ற விதம் யாது?
1. ஞானத்தில்
2. உடல்
3. கடவுளுக்கு உகந்தவராய்
4.மனிதருக்கு உகந்தவராய்

12. இயேசு ஞானத்தில் வளர்ச்சியடைந்தார் என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம் எது?
எருசலேம் தேவாலயத்தில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டார், கேள்விகளை எழுப்பினார்.

13. இயேசு உடல் வலிமை பெற்றார் என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம் எது?
வீட்டில் பெற்றோருக்கு கீழ்ப்படிந்தார்,பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்தார்

14. இயேசு கடவுளுக்கு உகந்தவராய் வாழ்ந்தார் என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம் எது?
பெற்றோருடன் இணைந்து மறை காரியங்களில் ஈடுபட்டார், செப வாழ்வில் வளர்ந்தார்.

15. இயேசு மனிதருக்கு உகந்தவராய் வாழ்ந்தார் என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம் எது?
மற்றவர்களுக்கும் உதவி செய்தார், சமூக சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிந்தார்.

16. உமது உடல் வளர்ச்சி பெற நீர் செய்ய வேண்டிய யாது?
1. ஊட்டச் சத்துள்ள உணவுகளை உட்கொள்ளல்.
2. விளையாட்டில் ஈடுபடல்.
3. உடற் பயிற்சியில் ஈடுபடல்

17. உமது ஆன்மீகம் வளர்ச்சி பெற நீர் செய்ய வேண்டிய யாது?
1. செபம் சொல்லுதல்
2. பக்தி முயற்சிகளில் ஈடுபடல்.

18. உமது சமூகம் வளர்ச்சி பெற நீர் செய்ய வேண்டிய யாது?
1. அர்ப்பணிப்புடன் பணியாற்றுதல்.
2. சிரமதானம் செய்தல்
3. ஆலயப்பணிகளில் துணை புரிதல்.
4. பிறருக்கு உதவுதல்.

19. உம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டிய நல்ல பண்புகள் 5 தருக?
1. கீழ்படிதல்
2. உண்மை பேசுதல்
3. பிறருக்கு உதவுதல்.
4. முதியவர்களை அன்பு செய்தல்
5. செபத்தில் நிலைத்திருத்தல்

20. சிறுவன் இயேசுவின் வாழ்வில் இருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் 5 எழுதுக?
1. பெற்றோருக்கு கீழ்ப்படிந்தார்.
2. மற்றவர்களுக்கும் உதவி செய்தார்.
3. சமூக சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிந்தார்.
4. பெற்றோருக்கு உதவி செய்தார்.
5. மறை காரியங்களில் ஈடுபட்டார்.
6. செப வாழ்வில் வளர்ந்தார்.

# இரண்டாம் தவணை

## பாடம் - 9

## அருளடையாளங்கள்

1. அருளடையாளங்கள் என்பது யாது?

கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் அருளை, புலங்களுக்கு விளக்கக்கூடிய வகையில் வெளிப்படுத்துகின்றனவும், கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டனவும் ஆகும்.

2. அருளடையாளங்கள் எத்தனை?

7

1. திருமுழுக்கு
2. ஒப்புரவு
3. நற்கருணை
4. உறுதிப்பூசுதல்
5. திருமணம்
6. குருத்துவம்
7. நேயிற்பூசுதல்

3. அருளடையாளத்தின் பண்புகள் எவை?

1. உள்ளே தரப்படும் அருளைப் பெறல்.
2. வெளியில் அதனை அடையாளப்படுத்தல்.
3. கிறிஸ்துவினால் நிறுவப்பட்டது.
4. அடையாளச் சடங்கு

4. அருளடையாளத்தின் பண்புகளை நற்கருணை எனும் அருளடையாளத்துடன் தொடர்புபடுத்தி காட்டுக.

1. உள்ளே தரப்படும் அருளைப் பெறல் - இயேசு
2. வெளியில் அதனை அடையாளப்படுத்துவது - அப்பம், இரசம்
3. கிறிஸ்துவினால் நிறுவப்பட்டது – பெரிய வியாழன் அன்று இறுதி இராவுணவின் போது
4. அடையாளச் சடங்கு – திருப்பலி

5. அருளடையாளங்கள் ஏழையும் (7) அடையும் நிலைகள்?

1. திருமுழுக்கு – பிறப்பு
2. நற்கருணை – ஊட்டம் பெறுதல்
3. உறுதிப்பூசுதல் - முதிர்ச்சி நிலை
4. திருமணம் / குருத்துவம் - வாழ்வின் நிலையைத் தேர்தெடுத்தல்.
5. ஒப்புரவு, நோயிற் பூசுதல் - நோய் அல்லது பலவீனமடைதல்.

6. நற்கருணை எனும் அருளடையாளத்தின் வழியாக யாரைப் பெற்று கொள்கின்றோம்?

இயேசுவை

7. இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது?

பெரிய வியாழன்

8. இயேசுவின் பாஸ்கா நிகழ்வை நாம் நினைவு கூருவது?

திருப்பலியில்

9. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியும் எது?

நற்கருணை

10. "அருளடையாளங்களின் அடையாளம்" எது?

நற்கருணை

11. எமது இறைவாழ்வு ஊட்டம் பெறுவது எதனால்?

நற்கருணையால்

12. நற்கருணையின் வெளியடையாளம் எது?

அப்பமும் இரசமும்

13. நற்கருணையின் அடையாளச் சடங்கு எது?

திருப்பலி

14. அருளடையாளங்களை எத்தனை வகையாக பிரிக்கலாம்?

3

1. புகுமுக அருளடையாளங்கள்
2. குணமளிக்கும் அருளடையாளங்கள்
3. பணிவாழ்வன் அருளடையாளங்கள்

15. புகுமுக அடையாளங்கள் எவை?

1. திருமுழுக்கு
2. உறுதிப்பூசுதல்
3. நற்கருணை

16. குணமளிக்கும் அருளடையாளங்கள்

1. ஒப்புரவு
2. நோயிற் பூசுதல்

17. பணிவாழ்வன் அருளடையாளங்கள்

1. குருத்துவம்
2. திருமணம்

18. ஒரு முறை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய அருளடையாளங்கள் எவை?

1. திருமுழுக்கு
2. உறுதிப்பூசுதல்
3. குருத்துவம்

19. புகுமுக அடையாளங்களை பெற்றுக் கொள்ளும் காலங்கள் எவை?

1. திருமுழுக்கு – பிறந்து 31 ம் நாளில்
2. நற்கருணை - 9 வயதில்
3. உறுதிப்பூசுதல் - 13 வயதில்

20. அருளடையாளங்களும் அவற்றினால் கிடைக்கும் அருள்களும் எவை?

1. திருமுழுக்கு - இறைவனின் பிள்ளையாதல்.
2. ஒப்புரவு - பாவ மன்னிப்பு
3. நற்கருணை - இயேசுவைப் பொறுதல்
4. உறுதிப்பூசுதல் - முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக வாழ்வதற்கு தேவையான அருள்.
5. திருமணம் - பொறுப்புக்களை நிறைவேற்ற தேவையான அருள்.
6. குருத்துவம் - இயேசுவின் பணியை தொடர்தாற்ற வேண்டிய தேவையான அருள்.
7. நேயிற்பூசுதல் - ஆன்மீக நலம் / உடல் நலம்

21. முதல் நன்மை பெறாத நண்பருக்கு நீர் கூறும் அறிவுரை யாது?

முதல் நன்மை பெறாது விடுவது பாவமாகும். கத்தோலிக்கர் உரிய வயதில் அருடையாளங்களைப் பெற வேண்டும். ஒவ்வொரு அருடையாளங்கள் வழியாகவும் எமக்கு அருள் வரங்கள் கிடைக்கின்றன. முதல் நன்மை பெறுவதால் எமது ஆன்மாவுக்கு நலம் கிடைப்பதுடன், இயேசுவையே நாம் பெறுகின்றோம். எனவே நீரும் முதல் நன்மை பெறும். அப்போது இயேசு உமது உள்ளத்தில் வருவார்.

**22.** ஞாயிறு திருப்பலிக்கு செல்லாத நண்பருக்கு நீர் கூறும் அறிவுரை யாது?

இறைவன் உலகை 6 நாளில் படைத்து 7 ம் நாள் ஓய்திந்தார். எனவே ஒய்வு நாளில் நாமும் ஓய்திருந்து இறைவன் நமக்கு செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் நன்றி கூறுவோம். ஞாயிறு திருப்பலியில் நாம் கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும். அன்றைய தினம் நாம் முழுப் திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும். இல்லாவிடில் அது பாவமாகும். எனவே நீர் ஞாயிறு திருப்பலியில் நாம் கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும். ஏனெனில் கத்தோலிக்கராகிய எமக்கு ஞாயிறு தினம் கடன் திருநாள்.

**23.** ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்ளாத நண்பருக்கு நீர் கூறும் அறிவுரை யாது?

ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் நமது பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கின்றது. நாம் கட்டாயம் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற வேண்டும். இல்லை என்றால் நாம் திடீர் மரணமடைந்தால் எமது பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்காது. அவ்வாறு எம் பாவங்களுக்கு மன்னிப்பு பெறாது நாம் இறந்தால், எமத பாவங்களக்கான தண்டனையை, உத்தரிப்பு தலத்திலோ அல்லது நரகத்திலோ பெற வேண்டி வரும். ஆதலால் நண்பா, நாம் அடிக்கடி பாவசங்கீர்த்தனத்தை பெற வேண்டும்.

## பாடம் - 10

## புகுமுக அடையாளங்களை

**1.** புகுமுக அடையாளங்கள் எவை?

1. திருமுழுக்கு
2. உறுதிப்பூசுதல்
3. நற்கருணை

**2.** திருமுழுக்கின் மூலம் நாம் பெறும் அருள்கள் எவை?

1. சென்ம பாவத்திலிருந்தும், கன்ம பாவத்திலிருந்தும் விடதலை பெறல்
2. இறைவனின் பிள்ளையாதல்
3. திருச்சபையில் அங்கத்துவம் பெறல்
4. ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்றைப் பதித்திடல்
5. இறையரசுக்கு உரிமையாகுதல்

**3.** திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் அடையாளங்களும் அவற்றின் பொருளும்

1. தண்ணீர் - பாவங்களைக் கழுவுவதன் அடையாளம்
2. வெண்ணிற ஆடை – தூய்மையின் அடையாளம்
3. திருத்தைலம் பூசுதல் - தூய ஆவியின் வரம் கிடைப்பதன் அடையாளம்
4. பாஸ்கா திரி – உயிர்த்த கிறிஸ்துவின் ஒளியின் அடையாளம்

**4.** நாம் இறையரசிற்குள் நுழைய எதைப் பெற்றிருக்க வேண்டும்?

திருமுழுக்கை

5. இயேசு திருத்தூதர்களுக்கு கொடுத்த இறுதிக் கட்டளை யாது?

எல்லா இனத்தாரையும் சீடராக்கி அவர்களுக்கு திருமுழுக்கு கொடுங்கள்

6. பின்வரும் பாடலின் பொருளை அறிந்து வினாக்களுக்கு விடை தருக.

**பெந்தகோஸ்து நாளில் சீடர்கள்**
**இறைவேண்டல் செய்த இல்லத்திலே**
**கொடுங்காற்று வீசிட இரைச்சல், அக்கினி**
**நா உருவில் தூய ஆவி வந்தார்**

**ஆவியால் நிரம்பிய சீடர்கள் துணிந்து**
**மறைக்கு சான்று பகர்ந்தனரே**
**ஆவியின் வரமும் மறையுரை ஊட்டமும்**
**அனைவருமே அங்கு பெற்றனரே**

**போதனைகளை மக்கள் தத்தம் மொழியில்**
**கேட்டு மலைத்து நின்றனரே**
**இதனால் மறையை தழுவிய மக்கள்**
**மூவாயிரத்திற்கும் அதிகமாமே**

7. பரிசுத்த ஆவியானவரின் வருகையின் போது இடம் பெற்ற நிகழ்வுகள் யாது?

1. கொடுங்காற்று வீசியது
2. பேரிரைச்சல் கேட்டது
3. அக்கினி நா வடிவில் தோன்றியது.

8. கிரேக்கத்தில் “பெந்தகோஸ்து” என்ற சொல்லின் பொருள் யாது?

ஐம்பது

9. இயேசு இறந்து எத்தனையாம் நாள் விண்ணகம் சென்றனர்?

50 நாள்

10. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணகம் சென்றார்?

10 நாள்

11. பரிசுத்த ஆவியானவரின் வருகையை சுருக்கமாகத் தருக?

இயேசு விண்ணகம் சென்ற பின் சீடர்கள் யூதர்களுக்கு பயந்து அறையில் தாய் மரியாள் உட்பட 120பேர் செபித்துக் கொண்டிருந்த போது திடீரென பேரிரைச்சலுடன் நெருப்பு போன்ற நாவு வடிவில் அங்கிருந்த எல்லோர் மீதும் ஆவியானவர் இறங்கினார்.

12. தூய ஆவியை பெற்ற ஒருவர் யாருக்கு ஒப்பிடப்படுகின்றார்?

படைவீரருக்கு

13. பேதுருவின் உரையைக் கேட்டு மனம் மாறியவர்கள் எத்தனை பேர்?

3000 பேர்

14. பரிசுத்த ஆவியானவரின் வருகையின் போது தாய் மரியாள் உட்பட எத்தனை பேர் கூடியிருந்தனர்?

120 பேர்

15. பரிசுத்த ஆவியானவரின் வருகையால் சீடர்களில் ஏற்பட்ட மாற்றம் யாது?

1. அவர்கள் துணிவுடன் இயேசுவக்கு சான்று பகிர்ந்தது

2. அயல் மொழிகளில் பேசியது
3. புதுமைகள் செய்தது
4. தீவிர போதனையில் ஈடுபட்டது.

**16.** உறுதிப்பூசுதல் என்பதன் பொருள் யாது?
முதிர்ச்சியடைதல்

**17.** ஆவியானவரை குறிக்கும் அடையாளங்கள் எவை?
1. காற்று 2. நெருப்பு 3. நீர்த்தடாகம்

**18.** இயேசு விண்ணகம் செல்லும் முன் தான் வாக்களித்தது யாரை?
ஆவியானவரை

**19.** உறுதிப்பூசுதலை வழங்குபவர் யார்?
1. ஆயர்

**20.** உறுதிப்பூசுதல் மூலம் கிடைத்த அருட்கொடைகளை வளர்த்துக் கொள்ள நீர் செய்யக் கூடிய செயல் 5 தருக?
1. இயேசுவைப் பற்றி இறைவாக்குரைப்பேன்.
2. கிறிஸ்துவின் சாட்சியாக முன்மாதிரியாக வாழ்வேன்.
3. தினமும் திருப்பலியில் பங்கு கொள்வேன்.
4. மறைக்கல்வி வகுப்புக்கு ஒழுங்காகச் செல்வேன்.
5. பீடப்பணியாளராக பணி புரிவேன்.

**21.** புகுமுக அருளடையாளங்கள் எவ் அருளடையாளத்தை பெற்றதும் நிறைவடைகிறது?
தேவநற்கருணையை

**22.** இத்தாலியில் லஞ்சியோனா நகரில் நடைபெற்ற நற்கருணைப் புதுமையைத் தருக?
கி.பி. 800 ஆண்டளவில் தூய லெகோனிசியனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட சிற்றாலயத்தில் குருவானவர் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது அப்பமும் திராட்சை இரசமும் இயேசுவின்திருச்சரீரமும் இரத்தமுமாக மாறுவது பற்றி சந்தேகித்தார். ஒரு நாள் அவர் திருப்பலியில் வசீகர வார்தைகளைச் சொல்லும் போது அப்பம் மாமிசமாகவும், திராட்சை இரசம் இரத்தமாகவும் மாறியதைக் கண்டார்.

**23.** எத்தனையாம் ஆண்டில் இத்தாலியில் லன்சினோ நகரில் நற்கருணைப் புதுமை நடைபெற்றது?
கி.பி. 700 ஆண்டளவில்

**24.** இத்தாலியில் லஞசியோனா நகரில் நற்கருணைப் புதுமை நடைபெற்ற சிற்றாலயம் எது?
தூய எலகோனிசியன் ஆலயம்

**25.** லஞ்சியோனா நகரில் நடைபெற்றநற்கருணைப் புதுமை பற்றி **1574**இல்செய்யப்பட்ட ஆய்வின் போது கிடைக்கப்பட்ட பெறுபேறு யாது?
1. உறைந்து போன சமனற்ற பல வடிவ இரத்தக்கட்டிகளை நிறுத்துப் பார்த்த பொழுது ஒவ்வொரு கட்டியும் ஒரே நிறையுடையதாக இருந்தன.
2. அதே போன்று எல்லாக் கட்டிகளையும் ஒன்றாக நிறுக்கும் போது அவற்றின் நிறையும் ஓர் இரத்தக் கட்டியின் நிறையை ஒத்ததாக இருந்தது.

**26.** லஞ்சியோனா நகரில் நடைபெற்றநற்கருணைப் புதுமை பற்றி **1570** இல்நாசா நிறுவனத்தால் செய்யப்பட்ட ஆய்வின் போது கிடைக்கப்பட்ட பெறுபேறு யாது?
சதைத்துண்டும் இரத்தமும் **“ AB பொசிட்டிவ்”** இரத்த வகையைச் சேர்ந்தவை.

27. 1970 ஆம் ஆண்டு டியுரின் நகர மாபெரும் கூட்டத்தில் லஞ்சியோனா நகரில் நடைபெற்றநற்கருணைப் புதுமை பற்றி நாசா நிறுவனத்தால் வெளியிடப்பட்டஅறிக்கை யாது?
நற்கருணையிலுள்ள சதைத்துண்டும் இரத்தமும் **“ AB பொசிட்டிவ்”** இரத்த வகையைச் சேர்ந்தவை.

28. லஞ்சியோனா நகரில் நடைபெற்ற நற்கருணைப் புதுமை பற்றி **1978** இல் செய்யப்பட்ட ஆய்வின் போது கிடைக்கப்பட்ட பெறுபேறு யாது?
1. சதைத்துண்டும் இரத்தமும் உண்மையாகவே ஒரு மனிதனுடையவை.
2. அத் சதைத்துண்டு மனித இதயத்திலிருந்து எடக்கப்பட்டவை.
3. அந்தசதைத்துண்டும் இரத்தமும் **“ AB பொசிட்டிவ்”**இரத்த வகையைச் சேர்ந்தவை.
4. உடலில்புதிதாக பெற்ற இரத்தத்தைப் போல் அதில்புரதப்பொருளும், தாதுப் பொருளும் அகற்றப்படாமல் இருக்கிறது.
5. பாதுகாப்பதற்காக சதைத்துண்டுக்கும் இரத்தத்திற்கும் எவ்வித இரசாயனக் கலவை பயன்படுத்தப்படவில்லை.
6. நீண்ட காலத்தை கொண்டிருப்பினும் சதைத்துண்டும் இரத்தமும் கேட்டுப் போகவில்லை.

29. நற்கருணைப் பந்தியில் பங்கு கொள்ளும் ஒருவரிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் எவை?
1. நற்கருணை ஆண்டவருக்கு மரியாதை செலுத்தி செபிக்க வேண்டும்.
2. நற்கருணை ஆண்டவரை முழந்தால் பணிந்து ஆராதிக்க வேண்டும்.
3. பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றிருக்க வேண்டும்.
4. அயலவருக்குத் தன்னைத் தாழ்த்தி பணி செய்யும் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.

30. கத்தோலிக்க திருவழிபாடுகளில் நற்கருணைக்கு ஏன் முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது?
நற்கருணை கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் இருப்பதால்

31. நற்கருணை அருளடையாளத்தின் மூலம் நாம் பெறும் நன்மைகள்?
1. அது எமது ஆன்மா உணவாகின்றது.
2. அதைப் பெறுவதால் நமது உடல் ஓட்டம் பெறுகின்றது.
3. பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது.
4. இயேசுவின் தியாகப் பலியில் பங்கு கொள்ள சந்தர்ப்பமாக அமைகிறது.

32. “கிறிஸ்துவின் மறையுடல்” எதைக் குறிக்கின்றது?
திருச்சபையை

## பாடம் 11
## குணமளிக்கும் அருளடையாளங்கள்

1. குணமளிக்கும் அருளடையாளங்கள் எத்தனை, எவை?
1. ஒப்புரவு அருளடையாளம்
2. நோயில் பூசுதல் அருளடையாளம்.

2. இவ்விரு அருளடையாளத்தையும் ஏன் குணமளிக்கும் அருளடையாளங்கள் என அழைக்கப்பகின்றது?
இவ்விரு அருளடையாளங்கள் வழியாக ஆன்ம, உடல் நலம் கிடைப்பதால் இவ்விரு அருளடையாளத்தையும் குணமளிக்கும் அருளடையாளம் என்கின்றனர்.

3. ஒப்புரவு அரளடையாளத்தை குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

1. மனமாற்றத்தின் அருளடையாளம்
2. பாவசங்கீர்த்தனம்
3. மன்னிப்பின் அருளடையாளம்

4. ஒப்புரவு அருளடையாளத்தை பெற விருப்பும் ஒருவர் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் எவை?

1. தனது பாவங்களை நினைத்தல்.
2. செய்த பாவங்களுக்கு மனம் வருந்துதல்.
3. மீண்டும் அந்தப் பாவங்களை செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.
4. குருவானவரிடம் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெறல்.
5. குருவானவர் சொல்லும் பரிகாரத்தை நிறைவேற்றுதல்.

5. ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பெறும் நன்மைகள் எவை?

1. திருச்சபையுடன் ஒப்புரவாகுதல்
2. இறைவனுடன் ஒப்புரவு, உள அமைதி கிடைக்கின்றது.
3. பாவங்களுக்குரிய தண்டனையிலிருந்து ஓரளவு விடுதலை கிடைக்கின்றது.
4. நித்திய தண்டனையில் இருந்து மீட்பு கிடைக்கின்றது.
5. ஆன்மீக வலிமை கிடைக்கின்றது.

6. இயேசு ஒப்புரவு அருளடையாளத்தை நிறுவிய சந்தர்ப்பத்தை தருக.

யோவான் நற்செய்தியில், அவர்கள் மீது ஊதி தூய ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ. அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படாது என்றார்.

7. இயேசு பாவங்களை மன்னித்த சந்தர்ப்பங்கள் 2 தருக.

1. இயேசு முடக்குவாதமுற்றவரை குணப்படுத்திய போது
2. பாவியான பெண் நறுமணத் தைலம் பூசுதல்

**நோயிற்பூசுதல்**

8. நோயிற்புசுதல் என்பதன் கருத்து யாது?

ஒருவருக்கு ஆன்மீக வல்லமையையும் மன அமைதியையும் உடல் நலனையும் பெற்றுக் கொடுக்கும் அருளடையாளமாகும்.

9. நோயிற் பூசுதல் ஏன் வழங்கப்படுகின்றது?

நோயாளியைத் திடப்படுத்துவதற்கு

10. நோயிற் பூசுதலுக்கு அவசியமானது எது?

நோயாளரின் நம்பிக்கை

11. நோயிற் பூசுதல் அருளடையாளத்தைப் பெற வேண்டிய சந்தர்ப்பங்கள் எவை?

1. ஒருவர் கடுமையான உடல் நோயில் இருக்கும் போது
2. கடுமையான அறுவை சிகிச்சைக்கு முன்னர்
3. வயோதிபத்தில் உடல் நலிவடைந்து இருக்கையில்
4. மரணத்தருவாயில் இருக்கையில்
5. கடுமையான விபத்தின் பின்னர்

12. நோயிற் பூசுதலை பொது நிலையினரும் வழங்கலாம் என கூறும் திருமுகம் எது?

யாக்கோபு திருமுகம்

13. நோயிற் பூசுதல் வழியாகக் கிடைக்கும் நன்மைகள் எவை?

1. ஆன்மீக வல்லமை
2. மன அமைதி
3. உடல் நலமடைதல்
4. பாவ மன்னிப்பு

**14.** நோயிற் பூசுதலின் அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள்கள் எவை?

1. கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைத்தல்.
2. வேதனை தாங்கிக் கொள்ள வலிமை கிடைத்தல்.
3. பாவங்களுக்கு மன்னிப்பைப் கிடைத்தல்.
4. உடல் நலமடைதல்.
5. நித்திய வாழ்வைப் பெற ஆயத்தம் செய்தல்.

